# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

## 02 VISCOMETER BATHS இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான பெறுகை

### இலங்கை புகையிரத சேவை - IFB No - SRS F.8052

1. இலங்கை புகையிரத சேவைக்கு 02 Viscometer Baths இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கு உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடம் இருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

3. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கீழுள்ள முகவரியில் மேலதிக விபரங்களை பெறவும் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கவும் முடியும் என்பதோடு வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2025.01.29 ஆம் திகதி தொடக்கம் 2025.03.03 ஆம் திகதி வரை வேலை நாட்களில் கீழுள்ள முகவரியில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

   **பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
   **புகையிரத சேவைகள் பெறுகை உப திணைக்களம்,**
   **ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல.: 94(11) 2438078 அல்லது 94(11) 4600202**
   **தொலைநகல் இல.: 94(11) 2432044**
   **மின்னஞ்சல்: srs.slr@gmail.com , tender1@railway.gov.lk**
   **இணையதளம்: www.railway.gov.lk**

4. விலைமனுதாரர் Viscometer Baths உட்பட பகுப்பாய்வு உபகரணங்களின் உற்பத்தியில் தமது திறன் மற்றும் முடியுமான தன்மையை நிரூபிக்கும் ஆவண அத்தாட்சியை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு Viscometer Baths உட்பட பகுப்பாய்வு உபகரணங்களின் உற்பத்திக்காக ISO 9001:2008 தரச் சான்றிதழ் அல்லது அதற்கு இணையான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. மீளளிக்கப்படாத கட்டணமாக 2,875.00 ரூபா மாத்திரம் செலுத்தி 2025.01.29 ஆம் திகதி தொடக்கம் 2025.03.03 ஆம் திகதி பி.ப. 3.00 வரை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் பெறுகை உப திணைக்களம், பிரதி பொது முகாமையாளரின் (பெறுகை) முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

6. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை தொகையானது ரூபா 100,000.00 இருத்தல் வேண்டும் என்பதோடு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வங்கியினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

7. விலைமனுக்களை 2025.03.04 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்கும்படி விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது),**
**பெறுகை உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.**

**Ref. No. SRS/F. 8052**

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது)**
**இலங்கை புகையிரத சேவைகள்**